2. தகவல் கோரல்—தொடர்ச்சி

(உ) சட்டமன்றப் பேரவை குழுக்கள் அமைப்பது.

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தினுடைய மானியக் கோரிக்கைகள் முடிவடைகின்றன. இன்னும் 2 நாட்கள்தான் சட்டமன்றம் இருக்கிறது. பொதுவாக சட்டமன்றத்தின் ஒவ்வொரு நிதியாண்டிலும் இந்தச் சட்டமன்றத்தின் உறுப்பினர்களைக் கொண்ட குழுக்கள், Estimates Committee, Public Accounts Committee போன்ற குழுக்களை அமைப்பது உண்டு. ஆனால், இந்த நிதியாண்டில் இதுவரையில் அப்படிப்பட்ட குழுக்கள் அமைவதற்கான எந்தவிதமான சாத்தியக்கூறுகளோ, அறிவிப்புகளோ எங்களுக்குத் தெரிவிக்கப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் 2 நாட்கள் இருக்கின்றன. இரண்டு நாட்களில் சொல்கிறேன்.

திரு. துரைமுருகன்: 2 நாட்களில் அமைத்துவிட முடியாது. எங்களுக்கு முதலிலே நீங்கள் தெரிவித்து இருக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. அதுபற்றி ஒரு முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் 2 நாட்களில் சொல்லிவிடுகிறேன். நாளைக்கோ அல்லது நாளை மறுநாளோ சொல்லிவிடுகிறேன்.

திரு. துரைமுருகன்: முடிந்த முடிவை நீங்கள் எதிர்க்கட்சிகள் உள்ள Business Advisory Committee-லே எடுக்க முடியுமே தவிர, அரசாங்கமே நேராக முடிவு எடுக்க முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. அதுபற்றி ஏற்கெனவே பேசி இருக்கிறேன்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருக்கின்ற குழுக்கள் 4, 5 மாத காலம்தான் செயல்பட்டுள்ளன. ஆகவே அந்த குழுக்களையே நீட்டிக்க வேண்டுமென்று கோரிக்கை வந்ததால் அந்த குழுக்களே நீட்டிக்கப்படும். அதற்கான அறிவிப்புகள் நாளை வெளியிடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[2002 மே 8

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு அதில் மாறுபட்ட கருத்து இல்லை. ஏற்கெனவே கொஞ்ச காலம் 4, 5 மாதங்கள்தான் இருந்திருக்கிறார்கள். அவர்களே தொடர்ந்து இருக்கட்டும். அதை நான் மறுக்கவில்லை. ஆனால் அதை இந்த மாமன்ற உறுப்பினர்களுக்கு, குறிப்பாக Business Advisory Committee-ல் இருப்பவர்களுக்கு தெரிவித்து அதற்கு ஒப்புதலைப் பெற்றிருக்க வேண்டும். அரசாங்கமே Suo-motu decision எடுக்க முடியாது. ஏனென்றால் இந்த மன்றத்தின் உரிமை அது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். உட்காருங்கள் சொல்கிறேன். இதைப்பற்றி தலைவர்களிடத்திலே கேட்டு இருக்கிறேன். (குறுக்கீடு) இல்லை. எல்லா தலைவர்களிடத்திலும் கேட்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு)

திரு. துரைமுருகன்: எங்களோடு நீங்கள் அதற்காக ஒரு கூட்டம் போடவில்லை என்றாலும்கூட unofficial ஆகக்கூட consult பண்ணியிருக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: காலையிலே புகழேந்தி இடத்திலே பேசியிருக்கிறேன். பேராசிரியர் அவர்களிடமும் பேசிவிட்டு தகவல் சொல்லிவிடுகிறேன் என்று சொல்லியிருக்கிறார். ஆக அதைப்பற்றி நாளை, நாளை மறுநாள் அறிவிப்பு வரும். மாண்புமிகு நிதியமைச்சர்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. துரைமுருகன் அவர்கள் கூறுவதுபோல் B.A., C., Extension of the existing Committee பற்றி முடிவெடுக்க வேண்டும் என்பது தேவையில்லை என்கிற கருத்து உள்ளது. இதுதான் உண்மை நிலை. எனவே இது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்த முடிவு மட்டும் அல்ல. இதுபற்றி ஏற்கெனவே பேராசிரியர் அவர்களுக்கும் கூறப்பட்டிருக்கிறது. உங்கள் கட்சிக்கும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.